# சிட்னியில் நாரதர்



இறைவன் ஊழித்தாண்டவமாடுவது பேரழிவுக்குத்தான் என நாரதர் பூலோகத்திற்கு வரும்வரையும் நம்பியிருந்தார். "சிவனுக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு" என்று கோபம் கொண்டதுமுண்டு. இங்கு வந்த பின்னர்தான் தாண்டவங்களின் சூட்சுமங்கள் புரிந்தது. மாபெரும் அழிவுகளைக் கூட ஆதாயமாக்கிக் கொள்ளும் வல்லமை தமிழனுக்கு உண்டென கண்டுகொண்டார். இதையறிந்துதான் இறைவன் சுனாமியை பூலோகத்திற்கு அனுப்பி வைக்கும்போது கவனமாக தமிழர் வாழும் இடங்கள் பாதிக்கப்படக்கூடியதாகப் பார்த்துக்கொண்டான். அவன் கருணையே கருணை. சேர்த்த தொகைக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு செறிந்த தொகைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்றபோதும் அதனால் பயனடைந்த தமிழ் அமைப்புக்களும் தனிநபர்களும் கணக்கிலடங்கா. சுனாமியோடு முளைவிட்ட சங்கங்களும் நிறைய உண்டு. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் புத்திசாலிகள் தமிழரில் நிறையவே உண்டு.

சுனாமி வந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. பாதிக்கப்பட்டவர்களைத்தவிர மற்றவர்கள் சுனாமியை சுத்தமாக மறந்தேவிட்டார்கள். இருந்தாலும் தமிழ் அமைப்புக்கள் இன்னும் அதை மறக்கவில்லை. மெல்போர்னில் இப்பொழுதும் சுனாமி நிதிக்காக கலை நிகழ்ச்சிகள் செய்கிறார்களாம். அவர்களை குற்றம் சொல்லி பயனில்லை. ஈழத்தில் யுத்தம் இன்று வருகிறது, நாளை வருகிறது என்று எல்லோரும் ஆருடம் கூறுகிறார்களே தவிர அது வந்தபாட்டை காணவில்லை. பார்த்த கண்ணும் பூத்த நிலையில் இனி யுத்தத்தை மட்டும் நம்பிப் பயனில்லை என போன வருசம் வந்துபோன சுனாமியை மீண்டும் துணைக்கு அழைத்திருக்கிறார்கள். நிதியுதவிகளை விட்டால் தமிழ் கலைகளை புகலிடங்களில் வளர்ப்பதற்கு வழியேயில்லை.

இந்த விசயத்தில் ஈழப்பிரச்சனையை ஒரு முடிவே இல்லாமல் இழுத்தடிக்கின்ற சகல தரப்பினரையும் பாராட்டத்தான் வேண்டும். சுனாமியைப்போல வந்தோமா முடித்தோமா என்று தடாலடியாக செய்யாமல் கட்டம் கட்டமாக வெவ்வேறு வகையான பிம்பங்களை மக்களுக்கு கொடுக்கிறார்கள். யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, சண்டை என்று சலிப்புத் தராத நாடகங்கள் போல அடிக்கடி காட்சியை மாற்றுகிறார்கள். இதனால் ஒவ்வொரு கட்டத்திற்குமேற்ற வெவ்வேறு வகையான நிதிகளை சேர்ப்பதற்காக நிகழ்ச்சிகள் வைத்து புலம்பெயர்ந்தவர்கள் தமிழ்க்கலைகளை வளர்க்கக்கூடியதாகவிருக்கிறது. ஈழத்திற்கு போராடி ஈழத்தமிழர்களுக்கு ஏதாவது கிடைக்கிறதோ என்னவோ, புலம்பெயர்ந்த கலைஞர்களுக்கு மேடை கிடைக்கிறது. தமிழ் கலைஞர்களுக்கு மேடை கிடைப்பதற்காகத்தான் இந்த யுத்தம், யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் மீண்டும் யுத்தம் என்று மாறி மாறி ஈழத்தில் முடிவில்லாமல் தொடர்கிறதோ? ஈழத்தில் யுத்தமே இல்லாதிருந்திருந்தால் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கலைகளும், கலைஞர்களும் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு, "வந்து பாருங்கள் - கண்டுகளியுங்கள்" என்று பிச்சை எடுக்கவேண்டியதுதான். இந்தியாவிலிருந்து விலாசங்களுடன் வரும் கலைஞர்கள் இதற்கு விதிவிலக்கு.

தமிழில் நிவாரணநிதியும் கலையும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாதபடி ஒட்டுண்ணிபோல் ஒன்றில் ஒன்று தங்கிப் பிழைக்கிறது. கலையில்லாமல் நிதியில்லை. நிதியில்லாமல் கலையும் இல்லை. இது வந்த நாட்டில் தொற்றிய பழக்கமல்ல. பாரம்பரியமாகவே ஈழத்தமிழன் காசு கொடுத்து கலையை இரசித்த பிராணியல்ல. கோயில் திருவிழாக்களில் திருவிழாக்காரரின் உபயத்தில் இலவசமாகவே கூத்துக்கள், பாட்டுகள், தவில் நாதஸ்வர கச்சேரிகள், பரதநாட்டியங்கள் எனப் பார்த்த பழகிய பாரம்பரியம் இவர்களுடையது. காசு கொடுத்துத்தான் கலையை இரசிக்க வேண்டுமென்ற நிலை வந்தால் கலையை ஈழத்தமிழன் கொலையே செய்துவிடுவான். அது ஆடம்பரமான ஒரு போகப் பொருள் என்பது அவன் துணிபு. கலைநிகழ்ச்சிக்கு டிக்கட் என்றால், எதற்கு நிதி? என்று கேட்டுவிட்டுத்தான் எடுப்பான் தமிழன். ஊரிலே சும்மா பார்த்த நிகழ்ச்சிகள்தானே இங்கு மட்டும் எதற்கு காசு கொடுத்துப் பார்க்கவேண்டுமென்று ஒரு தமிழ் அம்மையார் முன்பொருநாள் வானொலியில் ஆதங்கப்பட்டார். கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் கரைச்சுக் குடிச்சால் காசு பண்ணலாம். "கலையைப் படிச்சால் அதுதான் காசை விழுங்கும்" என்று அந்தக்காலத்திலேயே உணர்ந்தவன் ஈழத்தமிழன். கலைப்பிசாசு அண்டவிடாமல் கவனமாக பொத்தி வளர்க்கப்பட்ட பிள்ளைகளில் பலர் அவுஸ்திரேலியாவில்தான் குடியேறியிருக்கிறார்கள்.

அடுத்தவருக்குக் காட்டுவதற்காக ஆடம்பரமாக தேவைக்கு மேல் மாளிகை போல வீடு கட்டுவார்கள். ஆடம்பரமான வாகனம் வாங்கி ஓட்டாமல் வீட்டில் காட்ட வைத்திருப்பார்கள். கலியாணவீடு, பிறந்தநாள் என்று தங்களிடம் உள்ள காசையும் நகைகளையும் விளம்பரப்படுத்துவார்கள். தங்கள் பிள்ளைகளுடைய அரங்கேற்றத்தை கலியாணவீடு போல பல்லாயிரக்கணக்கில் செலவழித்து "பணக்காரர்" எனப் பறை தட்டுவார்கள். ஆனால் கலை அனுபவத்தை இலவசமாகக் கிடைக்கும் தமிழ்ப்பள்ளிகளின் கலைவிழாக்களோடும், வருந்தியழைக்கப்பட்ட நாட்டிய அரங்கேற்றங்களோடும் மட்டுப்படுத்திவிடுவார்கள். ஈழத்தின் வரண்ட பூமியில் இருந்து வந்ததனால் அவர்களுடைய கலையுணர்வுகளும் வரண்டுவிட்டதாக நாரதருக்குப்பட்டது. இந்தநிலையில் புலம்பெயர்ந்த கலைஞர்களுக்கு சுனாமியும், யுத்தமும்தான் வரப்பிரசாதம்.

தமிழ்க் கலைகள் வாழுவதற்காகவாதல் இன்னொரு சுனாமியை பூலோகத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கும்படி கடவுளுக்கு அனுப்பும் அடுத்த ஈமெயிலில் குறிப்பிடவேண்டுமென எண்ணிக்கொண்டார் நாரதர். எத்தனை நாள்தான் எப்போதோ வந்த ஒரேயொரு சுனாமியையும் இன்னும் துவங்காமல் இழுத்தடித்துக்கொண்டிருக்கும் யுத்தத்தையும் வைத்துக்கொண்டு தமிழ்க்கலைகளை வளர்ப்பது. ஒன்றில் இன்னொரு சுனாமி வரவேண்டும் அல்லது விரைவில் மந்த நிலை போய் ஈழத்தில் யுத்தம் வரவேண்டும். இரண்டும் ஏலாதென்றால் இறைவா என்னத்தையாவது அனுப்பி தமிழ் அகதிகளை உருவாக்கி அவுஸ்திரேலியாவில் தமிழ் கலைகள் நீடூழி வாழ வழி பண்ணு.

# OBITUARY



Vasanth Nadesan was born in Kandy in September of 1960. Despite being pushed into the comfort zone of being the youngest child and only son, Vasanth exercised exemplary humility even from a very early age.

As the blue eyed boy of the Nadesan family Vasanth was admitted as a student to Trinity College in the mid sixties. It was here that our association began and grew into a friendship that traveled many long roads together.

Vasanth had a fantastic balance of life between friends and family. His three sisters and cousins grew up with him in the same house and he was everybody's thamby to this day. When he was not with his family he was everybody's friend and even the stranger became his brother. He frequently uttered "Not to worry putha", A statement which fully describes his beliefs.

During his superb College career Vasanth excelled in Athletics, Rugby and cricket.
After completing College he entered into the mercantile world where he developed new interests and hobbies. His desire for branded clothing and physical fitness coupled with his agility and flexible movement of body molded him to be the most wanted man on the dance floor.

Vasanth developed into a versatile drummer and was an integral part of many a lively sing a longs. He was inbuilt with all the ingredients of a party man and enjoyed entertaining his friends till late in the night.

At the age of 29 Vasanth made the all important decision to tie the knot to Araliya De Silva and began his married life in New Zealand. The new environment and change of job and culture could not hold him back from what he enjoyed doing best. Vasanth quickly adapted to the change and made new friends yet kept the old. Everyone who came to know him loved him for his great sense of humor.

Vasanth had unconditional love for his wife and son and often fought to prove this.

To Araliya, Sathya and the extended families may the living God grant you consolation.

Vasanth, my friend and my brother, Life will never be the same again without you.

Good bye my friend. Good Bye.
Adolphus (Josh) Joseph
AKL/NZ

Vasanth Nadesan is a nephew of Jayshree Thuraisingam, Buvaneswari Sandiran and Jembugeswari Wijetunge of NSW

17ஆம் பக்கத்தொடர்ச்சி...

## மக்கள் வேண்டுவது இலங்கையில் நிரந்தர சமாதானம்

ஒன்றுபட்டால் எங்களின், மக்களின் வாழ்க்கையில் நிரந்தர சமாதானத்தை நாங்கள் கொண்டு வரலாம்.
அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
- மக்கள் சக்தி மாகாசக்தி!.
- மாணவர்கள் எதிர்காலத் தலைவர்கள் உங்கள் தலைமைத்துவத்தைக் காட்டுங்கள்.
- 1968ம் ஆண்டில் பாரிஸில் மாணவர்கள் நடத்திய போராட்டம் உலக அரசியலில் எத்தனையோ மாற்றங்களைக் கொண்டுவந்தது.

2006ம் ஆண்டில் தமிழ்மாணவர்களின் குரல் மனித உரிமைகளுக்காக ஓங்கி ஒலிக்கட்டும். பல்கலைக்கழகங்களைத் திறந்து உங்கள் பாடங்களைத் தொடருங்கள்.

படித்தவனின் சேவை சமூகத்தின் தேவை. அதைப் பாழடிப்பதை விட்டுக் கொடுக்காதீர்கள். இளந்தலைமுறையே, உங்கள் தைரியத்தில் தார்மீகமான- சமாதனத்திற்கான போராட்டத்தில் இன்றைய அரசியல் மாற்றத்தின் அதிமுக்கிய சக்தி உயிர்பெறப்போகிறது.

தமிழர்கள் போர் வெறி பிடித்த கொலைக் கூட்டமல்ல. பிரச்சினைகளைப் பேசித்தீர்க்கத் தெரிந்த புத்தி ஜீவிகள் என்பதை நிரூபியுங்கள்.

இலங்கையிலுள்ள இளம் தமிழரின் உணர்வில் உண்டாகும் புதிய கருத்துக்களுக்கு உலகம் பரந்த தமிழர்கள் இணையக் காத்திருக்கிறார்கள். புதிய வெளிச்சங்களில் உங்கள் சமுதாயத்தை வழி நடத்துங்கள்.

இலங்கைத் தமிழருக்கு விடிவு தரும் எதிர்காலம் உங்கள் கைகளில் உள்ளது என்பதை உணர்ந்து செயற்படுங்கள். இமயத்தில் ஏறவும் பள்ளத்தில் விழவும் எங்கள் கால்கள்தான் காரணம். உங்களை நம்பும் தமிழருக்கு இமயத்தைக்காட்டுவது உங்கள் பொறுப்பு.

Nrithiya Jothy
Indian Arts

Bharatha Natya
Annual Concert
on 27th May 2006.

Title:
குன்றிலாடும் குமரனும்
குழலூதும் கண்ணனும்

Phone:
03 9464 7697
Shanthini